# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்
# O.S. No. 215/ 2021

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879 ஆம் ஆண்டின் 10–வது சட்ட விதிகளின் படி திரு.எம்.சீனிவாசன் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **அசினாபீ** | **தொழில்** | : | |
| **கணவர் பெயர்** | : | **அப்துல்ரகுமான்** | **கிராமம்** | : | |
| **வயது** | : | **40** | **வட்டம்** | : | **காஞ்சிபுரம்** |
| **நேரம்** | : | **முற்பகல் 11.15** | | : | |

**வா.சா.1 முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் வாதி, நான் வாதி தரப்பு சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது. அதில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும்.

1) கடந்த 01.11.2009 அன்று எனக்கும் என் கணவருக்கும் திருமணம் நடைபெற்றது என்பதை காட்டுவதற்கான திருமண அழைப்பிதழை தாக்கல் செய்கிறேன். அந்த திருமண அழைப்பிதழ் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) எனது வாக்காளர் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) தாக்கல் செய்கிறேன். அந்த வாக்காளர் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக ஒத்திவைக்கப்படுகிறது.